ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# கிஞ்சித்காரம் தர்ம ஸம்ஸ்தாபநம்

நடத்தும்

## “புருஷோத்தம வித்யா”

# ஸ்ரீ புரீ ஜகந்நாத யாத்ரா



**புறப்பாடு : 3 அக்டோபர் 2025**

**யாத்ரை : 4 முதல் 12 அக்டோபர் 2025**

**திரும்ப வந்து சேர்தல் : 13 அக்டோபர் 2025**



மங்களகிரி பாநக நரஸிம்ஹர்,
ஸிம்ஹாசலம் வராஹநரஸிம்ஹர்,
ஸ்ரீகூர்மம் கூர்ம மூர்த்தி, புரீ ஜகந்நாதன்,
பத்ராசலம் ஸ்ரீவைகுண்டராமர்,
அஹோபிலம் நவநரசிம்ஹர்
ஆகியோரை தரிசிக்க யாத்ரைக்கு
அன்போடு அழைக்கிறோம்...

வழிகாட்டுதல் & மேற்பார்வை

**வேளுக்குடி**
**ஸ்ரீ. உ.வே. க்ருஷ்ணன் ஸ்வாமி**

*For more details and to register visit* **www.kinchitdharmam.org**

**OR CALL NOW TO REGISTER 044 2466 2728**

# தரிசிக்கப்போகும் புண்யக்ஷேத்ரங்கள்



04.10.2025

## மங்களகிரி

### க்ருஷ்ணா - புண்ய நதீ ஸ்நானம்

விஜயவாடாவுக்கு அருகில் உள்ள மங்களகிரி, பாநக நரஸிம்ஹர்-யானைவடிவில்இருக்கும்,நன்மைகளை நல்கும் மங்களகிரியில், பாநக நரஸிம்ஹருக்கு க்ருதயுகத்தில் அமுதம், த்ரேதாயுகத்தில் நெய், த்வாபரயுகத்தில் பால், தற்போது கலியுகத்தில் பாநகம் என்று ஸமர்ப்பித்து வருகிறார்கள். மலையிலிருக்கும் பெருமானின் திருமுகத்தில் இருக்கும் அகன்ற திருவாயில் நாம் எடுத்துச் செல்லும் பாநகத்தை ஸமர்ப்பித்தால் ஸ்ரீநரஸிம்ஹர் அதைப் பருகிவிட்டு, மீதத்தைப் ப்ரஸாதமாகக் கொடுக்கிறார். எத்தனை படிப்படியாக பாநகம் இருந்தாலும் ஓர் எறும்பைப் பார்க்கமுடியாது.



05.10.2025

## ஸிம்ஹாசலம்

விசாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள ஸிம்ஹாசலம், ஸ்ரீவராஹ நரஸிம்ஹர் - ஹிரண்யகசிபு ப்ரஹ்லாதனைக் கொல்வதற்காக அவனைக் கடலில் பிடித்துத் தள்ளவும், அவன்மேல் மலையை இட்டு அழுத்தவும் முற்பட்டான். அந்த மலையே ஸிம்ஹாசலம். ஸ்ரீமந்நாராயணன் உடனே வராஹ நரஸிம்ஹராய்த் தோன்றி ப்ரஹ்லாதனைக் கடலிலிருந்து மீட்டு, இந்த மலையும் அவன்மேல் விழாமல் தாங்கிப் பிடித்தார். இன்றும் பக்தர்களுக்காக ஸ்ரீவராஹ நரஸிம்ஹராக இம்மலையில் சேவை ஸாதிக்கிறார்.



06.10.2025

## ஸ்ரீகூர்மம்

ஸ்ரீகாகுளத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீகூர்மம் - ஸ்ரீகூர்ம மூர்த்தி மற்றும் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள். திருமாலின் கூர்மாவதாரத்திற்காக ஏற்பட்ட வெகுசில திருக்கோயில்களில் ப்ரதானமானது ஸ்ரீகூர்மம். பகவான் சங்க, சக்ர, கதா, பத்மங்களோடு கவசத்தைத் தரித்துக் கொண்டு கூர்ம (ஆமை) வடிவில் சேவை ஸாதிக்கிறார். தன் சக்ராயுதத்தால் க்ஷீரஸமுத்ரம் அல்லது ச்வேத புஷ்கரிணீ என்னும் குளத்தைப் பெருமானே இங்கு ஏற்படுத்தினார்.

ஸ்ரீராமாநுஜர் இத்திருக்குளத்தில் திருமண் கண்டெடுத்து இவ்வெம்பெருமானின் பெருமையை மீண்டும் நிலைநாட்டினார்.



07.10.2025
08.10.2025
09.10.2025

## புரீ க்ஷேத்ரம்

### கிழக்கு கடற்கரையில் ஸ்நானம்

புரீ, ஜகந்நாதப் பெருமாள் - கிழக்குக் கடற்கரையில் உத்கல (ஒடிசா) தேசத்தில், ரிஷிகுல்யா மற்றும் மஹாநதி ஆறுகளுக்கு நடுவில், நீலாசலம் என்னும் மலையில் உள்ளது புரீ க்ஷேத்ரம். அங்கு புருஷோத்தமன் என்னும் திருநாமத்தோடு சங்க சக்ரங்களை தரித்துக்கொண்டு, இந்த்ரநீல மணியால் ஆன உருவத்தோடு, பகவான் எழுந்தருளியிருந்தார்.

இந்த்ரத்யும்நன் என்னும் அரசன் இவரை தரிசிக்க வந்தபோது, இவ்வுருவத்தை மாற்றிக்கொண்டு, தாருப்ரஹ்மமாய் அதாவது மரத்தால் ஆன வடிவில், ஜகந்நாதர், பலதேவர், ஸுபத்ரை மற்றும் ஸுதர்சன சக்ரமாய் அவருக்கு ஸேவை ஸாதித்தார். இன்றும் பெருமான் காலையில் வடக்கே பதரீகாச்ரமத்தில் கங்கையில் நீராடி, மேற்கே த்வாரகையில் புத்தாடை புனைந்து, கிழக்கே புரீ க்ஷேத்ரத்தில் நன்கு உண்டு, தெற்கே ஸ்ரீரங்கத்தில் சயநித்து ஓய்வெடுக்கிறார்.



10.10.2025

## பத்ராசலம்

### கோதாவரீநதீ ஸ்நாநம்

பக்த ராமதாஸரால் வணங்கப்பட்ட பத்ராசலம், ஸ்ரீ வைகுண்ட ராமன் - மேரு மலைக்கும் மேனகைக்கும் பிறந்த பத்ரன் என்னும் ரிஷியின் தவத்துக்கிணங்கி, தன் மடியில் ஸீதாதேவியோடு, நான்கு திருக்கரங்களில் சங்கம், சக்ரம் வில், அம்பு ஆகியவற்றை ஏந்தி, வைகுண்டராமனாக அமர்ந்த திருக்கோலத்தில் கோதாவரீ நதிக்கரையில் ஸ்ரீராமர் தோன்றிய புண்யக்ஷேத்ரமே பத்ராசலம்.

போகல பொம்மக்கா என்னும் பெண் 17ஆம் நூற்றாண்டில் மண்மூடிப்போயிருந்த இவ்விக்ரஹங்களைக் கண்டெடுத்தாள். பின், பக்த ராமதாஸர் என்று ப்ரஸித்தமாய் அழைக்கப்பட்ட கஞ்செர்ல கோபண்ணா 1674ஆம் ஆண்டு, இத்திருக்கோயிலை ரூ 6 லக்ஷம் செலவில் கட்டினார்.

இவர் ஸ்ரீராமன் பேரில் பாடின கீர்த்தனைகள் பக்தர்களின் உள்ளத்தில் எப்போதும் பசுமையாக இருக்கின்றன.

# ஜய் நரஸிம்ஹா



11.10.2025 &
12.10.2025

அஹோபிலம்

## அஹோபிலம் (சிங்கவேள்குன்றம்) நவ நரஸிம்ஹர்கள்

108 வைணவ திருத்தலங்களில் 12 வடநாட்டில் உள்ளன. அதில் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டது, அஹோபிலம்.

பவநாசிநீ நதிக்கரையில் பக்த ப்ரஹ்லாதனுக்கு அருள்புரிந்து ஒன்பது நரஸிம்ஹர்கள் எழுந்தருளியுள்ள திருத்தலம்.

மாலோலன் எழுந்தருளியுள்ள இத்தலம் கருடனால் நிர்மாணிக்கப் பட்டபடியால் காருட சைலம் (அல்லது தார்க்ஷ்யாத்ரி) என்று கொண்டாடப்படுக்கிறது.





பூரீ ஜகந்நாதனை தரிசித்து, புருஷோத்தம வித்யா எனும் கீதை 15ஆம் அத்யாயத்தை புரீயில் பாராயணம் செய்து வேளுக்குடி ஶ்ரீ உ. வே. க்ருஷ்ணன் ஸ்வாமியின் உபந்யாஸத்தையும் கேட்டு மகிழ இந்த யாத்ரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# யாத்ரையின் சிறப்பம்சங்கள்

- புண்ய நதிகளான க்ருஷ்ணா, கோதாவரீ மற்றும் சக்ர தீர்த்தத்தில் (புரீ கிழக்குக் கடல்) நீராடுதல்.
- வேளுக்குடி ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணன் ஸ்வாமியின் சொற்பொழிவுகள் மூலம் தினமும் அந்தந்த திருத்தலத்தின் பெருமையை அங்கேயே கேட்டு அநுபவிப்போம்.
- ஸநாதன தர்மத்தின் கோட்பாடுகள் மற்றும் அதன் பெருமையை பல வித்வான்கள் நம்மோடு வந்து பேருந்துகளில் உபந்யசிப்பார்கள்.
- ஸாத்விகமான ப்ரஸாதம், குளிர்சாதனப் பேருந்துகளில் பயணம், தூய்மையான தங்குமிடம் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- 9 நாட்கள் மற்ற சிந்தனை ஏதும் இல்லாமல் நம் மனம், மொழி, மெய் ஆகியவை பக்தியில் திளைத்து சிறந்த வித்வான்களின் பஜனைகளில் பங்குகொள்ள பொன்னான வாய்ப்பு.
- தரிசிக்கும் புண்ணியத் தலங்களின் மாஹாத்ம்ய புத்தகம் வழங்கப்படும்.





# புருஷோத்தம வித்யா

யோ மாம் ஏவம் அஸம்மூட:
ஜானாதி புருஷோத்தமம் |
ஸ ஸர்வவித் பஜதி மாம்
ஸர்வபாவேந பாரத ||

- ஸ்ரீ பகவத் கீதா 15-19

புருஷோத்தமனான என்னை மயக்கமின்றி அறிபவன், என்னிடம் பக்தி செய்யும் வழியெல்லாம் அறிந்தவனாக, எல்லா முறைகளிலும் என்னையே வழிபட்டவன் ஆகிறான்.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கீதையின் 15ஆம் அத்யாயத்தில் தான் அனைத்து ஆத்மாக்களைவிடவும் சொல்லாலும் நெஞ்சாலும் எட்டமுடியாத அளவுக்கு உயர்ந்தவனானபடியால் தானே புருஷோத்தமன் என்று கூறுகிறார். இதைப்பற்றிய ஜ்ஞாநமே 'புருஷோத்தம வித்யா' என்று கொண்டாடப்படுகிறது.

கிழக்குக் கடற்கரையில், ஒடிசா மாநிலத்தில் புரீ க்ஷேத்ரத்தில், பகவான் புருஷோத்தமன், ஜகந்நாதன் என்றே போற்றப்படுகிறார்.

ஜய் ஜகந்நாத் !



ஸ்ரீரங்கம் கரிசைலம் அஞ்ஜநகிரிம்
தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தமம் ச
பதரீ நாராயணம் நைமிசம் |

ஸ்ரீமத்த்வாரவதீ ப்ரயாக மதுரா
அயோத்யா கயா புஷ்கரம்
ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே
ராமாநுஜோயம் முநி: ||

ஸ்வாமி ராமாநுஜர் ஸ்ரீரங்கம், காஞ்சீ, திருவேங்கடம், அஹோபிலம், ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், புரீ, பதரீ, நைமிசாரண்யம், த்வாரகா, ப்ரயாகை, மதுரா, அயோத்யா, கயா, புஷ்கரம், ஸாளக்ராமம் ஆகிய திவ்யதேசங்களைச் சென்று தரிசித்து ஆநந்தப்படுகிறார்.

## மேலும் விவரங்கள் மற்றும் உடனடி முன்பதிவிற்குத் தொடர்பு கொள்ளவும்


## கிஞ்சித்காரம் தர்ம ஸம்ஸ்தாபநம்

6, பீமஸேனா கார்டன் தெரு,
மைலாப்பூர், சென்னை - 600 004.

போன் 044 2466 2728
044 2499 2728

மொபைல் / வாட்ஸ்ஆப் 78240 85880
78240 85881

ஈ-மெயில் : yatra@kinchitdharmam.org

www.kinchitdharmam.org